அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி

ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI





Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624


அ.எண் :103/2017

தேதி : 24/09/2017

## மாணவர்களுக்கான கல்வி கடனுக்கான வட்டி மானியம் உடனடியாக அவர்களை சென்றடைய வேண்டும்.

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி நிறுவன தலைவர் அறிக்கை.

பண மதிப்பிழப்பிற்கு பிறகு, வங்கிகளின் இருப்பு தொகைகள் அதிகரித்துள்ளதாகவும், இது நாட்டின் வளர்ச்சிக்கு பெருமளவு உதவும் என்றும் வல்லுனர்களும் அதிகாரிகளும் முழக்கமிட்டனர். நாட்டின் வளர்ச்சி என்பது அந்த நாட்டின் குடிமக்களின் வளர்ச்சி என்பதே என்பதில் யாருக்கும் ஐயமில்லை.

மாணவர்கள், எளியவர்கள், பொருளாதாரத்தில் பின்னடைந்தவர்கள், சிறு குறு வியாபாரிகள், தொழில் முனைபவர்கள் என அனைத்து பிரிவினரும் இந்த நடவடிக்கையின் மூலம் பலன் அடைந்தால் மட்டுமே சமத்துவம் நிலைக்கும்.

ஆனால் நான் இது வரை சந்தித்த தொழிலதிபர்களோ, தொழிலாளிகளோ, மாணவர்களோ, வியாபாரிகளோ இந்த அதிரடி நடவடிக்கை மூலம் பலன் அடைந்ததாக தெரியவில்லை. மாறாக அனைத்து தரப்பினரும், ஏதோ ஒரு வகையில் பாதிப்பு அடைந்ததாகவே கருத்துக்களை பதிவு செய்துள்ளனர்.

பணப்புழக்கம் வெகுவாக குறைந்து, தொழில் வளர்ச்சி குறைந்து கொண்டு வரும் இந்த இக்கட்டான தருணத்தில், அடுத்த அதிரடியான GST மூலம் அனைத்து தொழில்களும் ஒரு குழப்ப நிலைக்கு தள்ளப்பட்டதாகவே நான் அறிகிறேன்.

ஏற்றுமதி இறக்குமதி பெருமளவு பாதிக்க பட்டுள்ளது. புதிதாக தொழில் செய்ய விரும்புவோர் உத்வேகம் குறைந்துள்ளது. சமுதாயத்தின் எந்த பிரிவினரும் நல்ல நிதி நிலையில் இல்லை என்பது வெட்ட வெளிச்சமாக தெரிகிறது.

திட்டங்கள் தீட்டுவதில் இருக்கும் திறமை, அவற்றை செயல்படுத்த வேண்டிய முறைகளிலும் இல்லாதது மிகவும் வருந்தத் தக்கது.


எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017

No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.

தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

குறிப்பாக கல்வி கடன் பெற்றிருக்கும் மாணவர்களுக்கு அவர்களுக்கு சென்றடைய வேண்டிய வட்டி மானியங்கள் சுமார் 534 கோடி ரூபாய் சென்று அடையவில்லை என்ற செய்தி மிகவும் அதிர்ச்சி அளிக்கிறது. 534 கோடி ரூபாய் என்பது ஒரு தொகையாக பார்க்காமல், அதில் அடங்கி இருக்கும் லட்ச கணக்கான மாணவர்களின் அடிப்படை உதவி என்பதை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கம் இதனை அனுமதித்து, வங்கி இத்தொகையை மாணவர்களின் வங்கி கணக்குகளுக்கு செலுத்தாதது, அதுவும் 2009 ஆம் ஆண்டிலிருந்து என்பது அதிர்ச்சி அளிக்கிறது.

வங்கிகளின் நடவடிக்கைகளும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டே இருக்க வேண்டும். தனி மனிதருக்கு ஒரு விதி, வங்கிகளுக்கு மற்றொன்று என்பது சரியான முறையாகாது என்பதை தெரிவித்து கொள்கிறேன்.

நன்றி வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்

என்றும் அன்புடன்

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத்தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com